**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மானாமதுரை.**
**முன்னிலை: திரு.S. முகம்மது யூசுப் நவாஸ், B.A., B.L.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, மானாமதுரை.**

**2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**இடைக்கால மனு எண். 8/2025**
**இன்**
**அசல் வழக்கு எண். 86/2018**

ராமன் (**இறப்பு**) ..... 1ம் பிரதிவாதி
1.ராஜலெட்சுமி
2.சுமதி
3.காளிதாஸ்
4.சேதுபதி .....மனுதாரர்கள்/2–5 பிரதிவாதிகள்

**/ எதிர் /**

மாணிக்கம் ..... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என்முன்பு 20.11.2025 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரார்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கணேசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

**1.** மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் CPC பிரிவு 151ன் படி தாவா வழக்கில் முதல் விசாரணை மட்டும் செய்யப்பட்டுள்ள வா.சா.1, வா.சா.2 சாட்சிகளை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியிருப்பதால் தாவா வழக்கை **Re-open** செய்திட அனுமதியளித்து உத்தரவிட வேண்டும் என்று அபிடவிட் தாக்கல் செய்து இம்மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**2. மனுவின் சுருக்கம்:-**

தாவா வழக்கு நிலுவையில் உள்ளபோது 1ம் பிரதிவாதி ராமன் என்பவர் இறந்துவிட்டதாகவும், அவரது வாரிசுகளான மனுதாரர்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பு ஏற்பட்டதாகவும், மனுதாரர்கள் தரப்பில் Set aside மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும், வாதி தரப்பு வா.சா.1, வா.சா.2 சாட்சிகளை தங்களது தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், எனவே PW1, PW2-ஐ குறுக்கு விசாரணை செய்ய ஏதுவாக வழக்கை

**Re-open** செய்திட தாவா மனுவை அனுமதியளித்திட வேண்டும் என்று மனுதாரர்களால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிருரையின் சுருக்கம்**

தாவா வழக்கில் மனுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை சென்றபோது அதை வாங்கி கொண்டு வழக்கில் ஆஜராகாமல் இருந்துவிட்டு தற்போது தாவா வழக்கை **Re-open** செய்ய கோருவது சட்டத்திற்கு புறம்பானது என்றும், தாவா வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே தாவா மனு தள்ளுபடி செய்யக்கூடியது என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. மனுவில் தீர்க்க வேண்டிய பிரச்சனை: இம்மனு அனுமதிக்கத்தக்கதா/இல்லையா என்பதேயாகும்:-**

மனுதாராரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்கத்தகுந்த நிலையில் உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இருதரப்பு வாதங்கள் கேட்டு முடிவு செய்ய வேண்டும் என்பதாலும், நீதியின் நலன் கருதியும் இம்மனுவானது செலவுத்தொகையின்றி அனுமதிக்கப்படுகிறது.

> "Audi alteram partem is a Latin phrase meaning 'listen to the other side', or "let the other side be heard as well". It is the principle that no person should be judged without a fair hearing in which each party is given the opportunity to respond to the evidence against them."

**மேற்கண்ட காரண காரியங்களின் அடிப்படையில் மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து, பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.21 04:22:13 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை.

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

**எதிர்மனுதார் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

S MOHAMED YOUSUF NAVAZ
Digitally signed by S MOHAMED YOUSUF NAVAZ
Date: 2025.11.21 04:22:21 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மானாமதுரை

**District Munsif Court**
**Manamadurai**

**IA.No.8/2025**
**in**
**OS.No.86/2018**
**Order**
**Dated 21.11.2025**